489—

## கூட்டுறவு அமைப்புகள் மூலம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கல்

*10752—திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமையல் எரிவாயு சிலிண்டர்கள் (எல்.பி.ஜி.) மாநிலம் முழுவதும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் வழங்க மைய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சமையல் எரிவாயு சிலிண்டர்களை மாநிலம் முழுவதும் கூட்டுறவு அமைப்புகள் வழங்க இப்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமையல் எரிவாயு சமையலுக்கு மிக முக்கியமான அத்தியாவசியப் பொருளாக இருக்கிறது. இது மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழே உள்ள கார்ப்பரேஷன்கள் மூலம், தனியார் ஏஜன்சி மூலம், இந்த எரிவாயு சிலிண்டர்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. ஆனால், அதிலே பல முறைகேடுகளும், மக்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்ற வகையிலே, சீனியாரிட்டியெல்லாம் பார்க்காமல், பல முறைகேடுகள் நடக்கின்றன. அவைகளைத் தவிர்க்க, நம்முடைய மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தி, நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களுடைய சீரிய முயற்சியாலே பொது விநியோக முறையெல்லாம் மிகச்சிறப்பாக இருக்கின்ற இந்த ஆட்சியிலே, இந்த எரிவாயு சிலிண்டர்களையும் கூட்டுறவு அமைப்பின் மூலம் சப்ளை செய்ய வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 27]

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய முக்கிய நகரங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பொதுமக்களுக்கு சமையல் வாயுவை விநியோகம் செய்கிற பணியை செய்து வருகின்றன. மற்ற ஊர்களில் எண்ணெய் நிறுவனங்கள்—ஆயில் கம்பெனிகள்—நம்முடைய கூட்டுறவுகளுக்கு அவர்களுடைய விநியோகத்திலே முன்னுரிமை அளிப்பதில்லை. அப்படி அவர்கள் அளிப்பதாக இருந்தால், தமிழ்நாடு முழுதும் கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் மூலமாகவும், மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாகவும் நாம் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 490, திரு. து. மூர்த்தி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

490—

கூட்டுறவு அங்காடிகளுக்கு கட்டிடங்கள்

*16470—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அத்தியாவசிய பண்டங்கள் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கு அரசு செலவில் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தியாவசிய பண்டங்கள் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கு அரசு செலவில் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அத்தியாவசியப் பண்டங்களை வைத்து விற்பனை செய்யும்போது, பெரும்பாலான இடங்களில் தனியார் கட்டிடங்களில் வைத்து விற்பனை செய்கிறார்கள். தனியார் கட்டிடத்தில் வைத்து விற்பனை செய்தால், விற்பனையாளர்கள்